Registered as a Newspaper  பக்கங்கள் 06  விலை ரூபா: 5-00

Nallur Branch Library

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 03  திருவள்ளுவர் ஆண்டு 2023  மாசி 18  (01-03-1992)  ஞாயிற்றுக்கிழமை  ஓசை: 12

தேசியக் கல்வி நிறுவன

## கல்வி டிப்ளோமா 7ஆம் திகதி ஆரம்பம்

தேசிய கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படும் கல்வி டிப்ளோமா பயிற்சிநெறி ஆரம்பமாக உள்ளது இம் மாதம் 7 ஆம் திகதி காலை 10 30 மணியளவில் யாழ். இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள ஆசிரிய கல்வி மத்திய நிலையத்தில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் தலைமையில் (6ஆம் பக்கம் பார்க்க)

### தாளையடி கடலில் சம்பவம்

# கடற்புலிகளின் துணிகர அதிரடி

# ரோந்துக் கப்பலுக்கு பலத்த சேதம்

## படையினருக்கு பெரும் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் தாளையடி கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படை ரோந்துக்கப்பல் ஒன்றின் மீது கடற்புலிகள் துணிகர அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட உக்கிர மோதல் கடற்பரப்பில் 20 நிமிடத்திற்கு மேல் நீடித்தது. இராணுவத்தினரை ஏற்றி வந்த கடற்படைக் கப்பல் பலத்த சேதமடைந்தது. பல படையினர் கொல்லப்பட்டனர். பலர் படுகாயமடைந்தனர்.

புலிகள் தரப்பில் நான்கு கடற்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் மாலை 5 00மணியளவில் இடம்பெற்ற இக்கடற்போர் பற்றித் தெரிய வருவதாவது, காங்கேசன் துறையில் இருந்து கட்டைக் காட்டிற்கு துருப்புக்களை ஏற்றிச்சென்ற கடற்படைக் கப்பலே கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாகும்.

'சவட்டன் ரகத்தைச் சேர்ந்த இக் கடற்படைக் கப்பலைக் கடற்புலிகள் வழிமறித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட உக்கிர மோதல் இருபது நிமிடங்கள் வரை நீடித்தது.

இறுதியில் புலிகளின் ஆக்ரோசமான தாக்குதலைத் தொடர்ந்து ஏற்பட்ட பலத்த இழப்புக்களுடன் கடற்படை ரோந்துக் கப்பல் பின்வாங்கிச் சென்றது. இந்த உக்கிர கடற் சண்டையின்போது பல இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பல படையினர் படுகாயமடைந்தனர்.

தாளையடிக் கடற்பரப்பில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## 4 கடற்புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

தாளையடிக் கடற் பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றமோதலில்போராளிகள் தரப்பில் நான்கு கடற் புலிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கப்டன் தமிழரசன் அல்லது சியாப் (பரமகுரு உதயகுமார் - ஆதிகோவிலடி வல்வெட்டித்துறை), லெப்டினன்ட் சஞ்சீவன் (வைரமுத்து ஜெயேந்திரன் - மாங்கேணி, வாழைச்சேனை), 2 ஆம் லெப்டினன்ட் சிவலோகநாதன் (வேலாயுதபிள்ளை விக்கினேஸ்வரன் - தாளையடி உடுத்துறை), 2 ஆம் லெப்டினன்ட் ஆனந்தன் (அண்ணாத்துரை அழகன் - புனிதநகர் கற்கோவளம்) ஆகிய கடற்புலிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.



கப்டன் தமிழரசன் (சியாப்)



லெப். சஞ்சீவன்



2 ஆம் லெப். சிவலோகநாதன்



2 ஆம் லெப். ஆனந்தன்

## "பிரதமரின் கூற்றுக்கள் உண்மைக்குப் புறம்பானது"

(லண்டன்)

பிரதம மந்திரியும், நிதி அமைச்சருமான டி.பி. விஜயதுங்காவின் கூற்றுப்படி அரச வங்கிகளான மக்கள் வங்கியும் இலங்கைவங்கியும் வங்குரோத்தாகவிருந்தால் வங்கிக் கதவுகளை இழுத்து மூடவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என்று வங்கி ஊழியர்கள்சங்கச் செயலாளர் சசியபால பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

வங்கிகள் இரண்டிலும் பணக் கையிருப்பு ஒன்றும் மோசமடையவில்லை. வங்கி நடைமுறைகள் வழமைபோல் நடைபெறுகின்றன. வங்கிகளை மக்கள் மயமாக்கவேண்டுமென்பது அரசாங்கம் சுயமாக எடுத்த முடிவல்ல. அது வெளியாரின் அழுத்தத்தால் அரசு எடுத்த முடிவாகும். இப்போது அரசு என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்ற நிலையில் உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

### வாழைச்சேனையில் பலியான

## இராணுவத்தினர் தொகை 27 ஆக அதிகரிப்பு

கடந்த வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் வாழைச்சேனையிலுள்ள பெண்டுகள்சேனையில் நடைபெற்ற விடுதலைப் புலிகளின் தாக்குதலில் குறைந்தது 27 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகக் கொழும்புப் பத்திரிகையை மேற்கோள் காட்டி இந்திய வானொலி தெரிவித்தது.

இத்தாக்குதலில் 20 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக முன்னர் வந்த செய்திகள் தெரிவித்திருந்தன. இத்தாக்குதலில் புலிகள் பெருமளவு ஆயுதங்களையும் 20 இராணுவத்தினரின் உடல்களையும் கைப்பற்றியமை தெரிந்ததே.

## வவுனியா கிராமங்கள்மீது கொடூரமான குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல தமிழ் கிராமங்கள் தொடர்ந்தும் விமானக்குண்டு வீச்சுக்கும் எறிகணைத் தாக்குதலுக்கும் உள்ளாகி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

ஈச்சங்குளம், கட்டையர்குளம், பெரியதம்பனை ஆகிய பகுதிகள் மிகமோசமான விமானக்குண்டு வீச்சுக்கு உள்ளாகியுள்ளது இதனால் பொதுமக்களின் பெரும்பாலான குடிமனைகள் சேதம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு புலிகள் வவுனியாவில் வீரச்சாவு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்றுக்காலை 10.30 மணிக்குச் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் போராளிகள் தரப்பில் நான்கு வீரவேங்கைகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கைகள் றம்போ அல்லது ஆண்டான் [கருணாநிதி அருணாசலம் அற்புதநாதன், முருகனூர் வவுனியா], ஜேக்ஸன் அல்லது காவலன் [கந்தையா சுப்பிர (6 ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவில்நேற்றும்மோதல் ராணுவ கவசவாகனம் அழிப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் நேற்று தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. கட்டையன் குளத்திலிருந்து ஈச்சன் குளம் நோக்கி கனரக வாகனங்கள் சகிதம் இராணுவத்தினர் முன்னேற முயன்றபோதே இந்த மோதல்கள் நிகழ்ந்தன.

இந்த மோதலின்போது தரணிக்குளம் என்னும் இடத்தில் புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலுக்கு இலக்காகி கனரக வாகனமொன்று பலத்த சேதமடைந்தது. இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டது.

அதேவேளை அப்பகுதியில் இராணுவத்தினருக்கு உதவியாக இரண்டு உலங்கு வானூர்திகள் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் என்பன தொடர்ச்சியான தாக்குதல்களை நடாத்தின.

வவுனியாவில் 'வன்னி விக்கிரம' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்து வருகின்றனர்.

## காலமும் கோலமும்

## வரி விளம்பரம்

### இசை வகுப்புகள்

நீங்களும் இசை வல்லுனர் ஆகவேண்டுமா? சப்தஸ்வரம் இசைக் கல்லூரியில் தொடர்பு கொள்ளவும். இங்கே ஓகன்-கிற்றார் - ட்றம்ஸ், மிருதங்கம் வயலின் - ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. தொடர்பு சப்தஸ்வரம், இசைக்கல்லூரி அரியாலை-பார்வதி வித்தியா சாலை முன்பாக அரியாலை-யாழ்ப்பாணம்.

(சி 3978)

### வைத்திய சேவை

தலைமயிர் வளர, முகப்பரு வெண்குஸ்டம், வாதம், ஆஸ்த்மா மற்றும் சகலதோல் வியாதிகளுக்கும் மெய்ஞ்ஞான ஆலோசனைப்படி நுண்ணியியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்காலை 9.00-12.00மணி வரை. வேளாங்கண்ணி வைத்திய சாலை டாக்டர் எம். கருணாகரன் 614மானிப்பாய்வீதி ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

(2240)

### குழந்தைகள் வைத்தியம்

தீவக பாக்கியம் குழந்தைகள்-சிகிச்சை நிலையம்-K.K.S வீதி மனோகரராசந்திக்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலிருந்து 1-மைல் தொலைவிலுள்ள இருபாலை சந்தியிலும் இயங்குகின்றது. (2246)

### மீன் தூள் விற்பனை

கோழித்தீன் மற்றும் கால்நடை உணவுகளுக்கு சேர்க்கப்படும் புரதச்சத்து நிறைந்த மீன் தூள் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள், உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(3962)

### பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

வேலணைகிழக்கைச் சேர்ந்த சி.நவரத்தினம் என்பவரது உலர் உணவு விநியோகத்திற்கான அனுமதிஅட்டை 'இ' செம்மணிச்சந்தியில் தேநீர்க்கடை உரிமையாளர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு எமது காரியாலயத்தில் திரு. தனராஜ் என்பவரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

### ஒய்வூதியக் கொடுப்பனவு

(புங்குடுதீவு)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் ஒய்வூதியம் பெறுவோர்க்கான பெப்ரவரி மாதக் கொடுப்பனவு இம்மாதம் 20ஆம் திகதி முதல் யாழ் அடைக்கலமாதா கோவிலுக்கு அருகில் உள்ள மேற்படி சங்க கிராமிய வங்கியில் பணமாக வழங்கப்படுகின்றது.

(22)

### பாதயாத்திரை ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் போரின் கொடுமையால் வாடும் தமிழ் மக்களின் துயர்தீர தெய்வஅருள்வேண்டி நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குஉட்பட்டசகல ஆலயங்களுக்கும் பாதயாத்திரை ஒன்று எதிர்வரும் 06 ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட உள்ளது.

இதுசம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று இன்று காலை10மணிக்கு நல்லைதிருஞானசம்பந்தர்ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கும்படி அபிமானிகள் கேட்டுக் கொள்ளப் படுகின்றனர்.

---

சங்கானை

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ.)

## கணக்குப் பதிவாளர் தரம் 1

## பதவி வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகள்:-

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத் திட்டத்தில் கணக்குப் பதிவாளர் அல்லது கணக்குலிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 ஆவது சம்பளத் திட்டத்தில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

(ஆ) ஐக்கிய இராஜ்ஜியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்;

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்)/க. பொ. த. (உயர்தரம்) இல் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 02 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை:-

21 — 40 வரை (கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்வோருக்கு வயதெல்லை கணிக்கப்பட மாட்டாது)

சம்பளத்திட்டம்:-

$$301/09 \quad \frac{905 - 1605}{40X5 - 50X10}$$

இத்துடன் கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தமது சங்கத்ினூடாகவே விண்ணப்பத்தினை அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 12-03-92 அன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக ''தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை'' என்ற விலாசத்திற்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,

சங்கானை.

26-02-1992 (சி/3984)

---

## தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு

## வெற்றிடங்கள்

யாழ். மாவட்ட நீதி நிர்வாகச் செயலகம், வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி, நீதி நிர்வாகச் செயலகங்களில் பின்வரும் வெற்றிடங்களுக்கு யாழ். மாவட்டத்திற்குள் வசிப்பவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. நிர்வாக / கணக்கு உதவியாளர்கள்:

தகைமைகள்

அ) க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் 4 பாடங்களில் சித்தியடைந்தவராயும், க. பொ. த. (சா/த) பரீட்சையில் தமிழ், கணிதம் / எண் கணிதம் ஆகிய பாடங்களில் திறமைச் சித்தி அடைந்தவராயும் 21 வயதிற்கு மேற்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

அல்லது

ஆ) எழுதுவினைஞர் சேவையை ஒத்த சேவைகளில் இருந்து விலகியவராயும் அல்லது இளைப்பாறியவராயும் நல்ல தேகாரோக்கியம் உள்ளவராயும் இருத்தல் வேண்டும்.

### 2. தட்டெழுத்தாளர்கள் (தமிழ்)

தமிழ் தட்டெழுத்தில் நல்ல அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

### 3. செயலக உதவியாளர்கள்

க. பொ. த. (சா/த) பரீட்சையில் சித்தியடைந்தவராயும், 18 வயதிற்கு மேற்பட்டவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை முழுப் பெயர், மூாவரி, பிறந்த திகதி, பால், குடியியல் நிலை, கல்வித் தகைமைகள், வேலை அனுபவங்கள், போன்ற சகல விபரங்களும் உடையதாக சொந்தக் கையெழுத்தில் தயாரித்துக் கொண்டு 1992-03-04 ஆம் திகதி காலை 9-00 மணிக்கு இணுவில் துரை வீதியில் அமைந்துள்ள தமிழீழ நீதி நிர்வாகச் செயலகத்திற்கு நேரடியாகச் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பொறுப்பாளர்

தமிழீழ நீதி நிர்வாகப் பிரிவு

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

தலைமைச் செயலகம்

தமிழீழம்.

(சி3987)

---

### யேசு ஜீவிக்கிறார்

## 14ஆவதுசுவிஷேச மாநாடு

இடம்: ரட்ணம் விளையாட்டரங்கு,
கொட்டாஞ்சேனை
(செல்லமஹால் படமாளிகைக்கு அருகில் கொழும்பு -13)

காலம்: மார்ச் 08 முதல் 15 வரை
மாலை 5.30 மணிக்கு

செய்தி: சகோதரர் செ. இராஜேந்திரம்

(2251)

---

## தேவை

முன்னணி மருந்து விற்பனை நிலையமொன்றில் பணி புரிவதற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விற்பனையாளர் (பெண்)
காசாளர் (பெண்)
சிட்டைகள் பரிசோதகர் (பெண்)
களஞ்சியப் பொறுப்பாளர்கள்
பொருள்கள் பரிசோதகர்
காவலர்
மற்றும் தொழிலாளர்கள்

விண்ணப்பதாரிகள் ஆங்கில மருந்துகள் சம்பந்தப்பட்ட அறிவு படைத்தவர்களாகவும் ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகவும் இநத்தல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விண்ணப்பதாரிகள் சொந்தக் கையெழுத்தில் தயாரிக்கப்பட்ட சொந்த விபரங்களுடன் 04-03-92 (புதன் கிழமை) காலை 9-00 மணிகு மருந்து பால்மா (தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனம்)

DRUGS AND MILK FOODS (PVT) Ltd.

என்ற முகவரிக்கு நேர்முகப்பரீட்சைக்குச் சமுகம் தரும்படி வேண்டப்படுகின்றனர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறுகிய கால அறிவித்தலில் பதவிப் பொறுப்பு ஏற்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்,

**Drugs and Milk Foods (PVT) Ltd**

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(சி/3986)

---

## நினைவு கூருகின்றோம்

**1992-03-01**

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை, மூதூர், கட்டை பறிச்சான் பகுதியில் சிறிலங்காப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு, புல்லுமலைப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**கரன்** (ஞானசேகரம் -பாஸ்கரன்- செங்கலடி, மட்டக்களப்பு)

பொலநறுவையில் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட 16 தமிழர்கள்.

திருக்கோணமலையில் பரீட்சைக்காக வந்தபோது தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட 2 க· பொ. த. (சாதாரண தர) வகுப்பு மாணவர்கள்.

பருத்தித்துறை கந்தமுருகேசனார் வீதி, புத்தூர்ச் சந்தி ஆகிய பகுதிகளில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட குடத்தனை, அல்வாய் ஆகிய இடங்களைச் சேர்ந்த 2 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு வீமன்காமத்தில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடி விபத்தில் எம்மைப் பிரிந்த-

**கப்டன் ரகீம்** (இராதுரை கருணாகரன்-அராலிவடக்கு, வட்டுக்கோட்டை))

மாவிட்டபுரத்தில் சிறிலங்காப் படையினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**சந்திரன்** (சின்னப்பு குணசேகரம்-பாரதிபுரம் மேற்கு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(சி/3983)

Branch Library

# கடலிலே காவியம் படைத்த கடற்புலிகள்

28-2-1992 (வெள்ளிக்கிழமை) காங்கேசன்துறைக் கடற்படை முகாமில் இருந்து வெற்றிலைக்கேணிப் படைமுகாமை நோக்கி "சவட்டன் ரோந்துப்படகில்" வந்த சிறிலங்கா இராணுவத்தினரை வழிமறித்து நடத்திய கடற்சண்டையின் போது நான்கு கடற்புலிகள் வீரச்சாவைத் தழுவியுள்ளனர்.



கப்டன் தமிழரசன்
(சியாப்)



லெப். சஞ்சீவன்



2 -ம்லெப். ஆனந்தன்



2-ம்லெப். சிவலோகநாதன்

விடுதலைப் புலிகளின் கடற்புலிகள்
கடலிலே காவியம் படைப்போம்
SEA TIGERS
OF LIBERATION TIGERS

**எங்கள் தாயகக் கடலில் அந்நியர் எவரையும் ஆதிக்கம் செலுத்திட அனுமதிக்க மாட்டோம். இந்த இலட்சிய உறுதியுடன் கடலிலே காவியமாகிவிட்ட கடற்புலிகளுக்கு எமது வீரவணக்கங்கள் உரித்தாகட்டும்!**

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

— கடற்புலிகள் —

# களு. இராணுவ முகாமில் தடுக்கப்பட்டுள்ளோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளின் போது பல்வேறு பகுதிகளில் இருந்தும் இராணுவத்தினரால் கைது செய்யடபட்டு களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 430 அப்பாவித் தமிழ் மக்களது பெயர்ப்பட்டியல் வருமாறு.

பாக்கியராஜா தங்கவேல்; கந்தர் இராசநாயகம்; தங்கராசா நடேசன்; இராஜதுரை இராசகீர்த்திமார்க்கண்டுசெல்வராஜா; முத்துலிங்கம் மதியரசன்; மாணிக்கட்போடி நடராஜா; சின்னத்தம்பி பத்மநதன்; தம்பிராசா பத்மநாதன்; செல்லத்துரை ஜெயராஜா; பெரியான் தியாகராஜா; பலசிங்கம் தங்கவேல் அல்லது ஜெகநதன்; மாணிக்கப் குணரடணம்; தேவராஜா சிவசங்கர்; தங்கத்துரை முகில்வனம்; வீரகுடடி அற்புதராஜா; விநாயகமூர்த்தி விவேகானந்தன்; அய்யாத்துரை சுடபிரமணியம்; சின்னத்துரை இராசகுமார்; கதிரேசபிள்ளை வரதராஜா; தேவராஜா சுதாகரன்; சாமித்தம்பியோகராஜா; காளிக்குட்டிசிவானந்தராஜா; குழந்தைவேல்ஜெராப்; வேலுப்பிள்ளை இராசு; சின்னத்தம்பி வரதன்; தில்லையம்பலம் சோபராஜா; தம்பிப்பிள்ளை சுந்தரமூர்த்தி; முத்துலிங்கம் மகேந்திரன்; முருகேசு சுந்தரலிங்கம்; தம்பியப்பா கணேஸ்வரன்; நாராயணன் சிவராம்; வீரக்குட்டி இராசதுரை அல்லது கதிர்காமன்; தர்மரத்தினம் இளங்கோவன் அல்லது இளங்கோ; முருகேசு கனசேகரம்; சோமசுந்தரம் சிவராஜா; இராசதுரை இருதயநாதன; சீனித்தம்பி செலவராஜா; சின்னத்தபபி குணபாலன்; சபாரத்தினம் குணசேகரம்; தேவராஜா பத்மராஜ; பாலசிங்கம் தவராஜா; கிருஸ்ணபிள்ளை கிருஸ்ணகுமார்; சுப்பிரமணியம் உதயகுமார்;

சிததிர வேல் தங்கராசா; சாமித்தம்பி சிவராசா; இராசநாயகம் சேதீஸ்வரன்; பாலராமன் கணேசலிங்கம்; யேசுராசா கணபதிப்பிள்ளை; கிரிபண்டா சுனில; சோதிமுத்து செல்வநாயகம்; அன்வர் சாதிக்பவுசர்; நாகலிங்கம் செல்வராசா; சிதம்பரம் செல்வராசா; இராசமணி சந்திரன்; கணபதிப்பிள்ளை யோகேந்திரன்; றோக்கு யேசுதாசன்; அந்தோனிப்பிள்ளை வணோதவதாஸ்; மாசிலாமணி நிலாந்தரன்; கதிர்காமத்தம்பி சுந்தரன்; காந்திவில்லிவீரசிங்கம்; சோமசுந்தரம் தர்மலிங்கம்; செல்லச்சாமி ரவீந்திரன் அல்லது ரவி; காசகாமுத்து வேல்போடி; குஞ்சித்தம்பி கிருபராஜா அல்லது குகன்; சோமசுந்தரம் சந்திரசேகரம்; கொச்சியான் பாக்கியநாதன்; சின்னத்தம்பி ஜெயராஜா; அகுஸ்தினப்பிள்ளை ஜீவகரன்; தம்பிராஜா சுரேந்திரன்; கணபதிப்பிள்ளை இராமநாதன்; கந்தசாமி தங்கவடிவேல்; சாமித்தம்பி பாக்கியராஜா; நாகமணி உதயசூரியன்; நாராயணபிள்ளை யோகராசா; ஆறுமுகம் பாக்கியநாதன்; நாகப்பன் நடேசமூர்த்தி; நாகமுத்து நல்லரத்தினம்; தங்கராசா தவராஜா; காசாரபோடி காசிராஜா; நாகேந்திரன குலேந்திரன்; குழந்தைவேல் குணரட்ணம்; தாமோதரம்உதயலதன்; சிவலிங்கம்சதீஸ்குமார்; விநாசிதம்பி சிதம்பரம்; இராசையா உதயகுமார்; இராசையா கிருபாகரன்; கந்தசாமிசிவகுமார்; சபாரட்ணம் குணசேகரம்; முருகுப்பிள்ளை திருத்தணி; துரைராசா சிறிதரன்; வையாபுரி சந்திரகுமார்; முத்தன் வரதன்; இரட்ணம் தவராஜா;

நல்லதம்பி மனோகரன்; கனகசுந்தரம் திருச்செல்வம்; அழகையா தங்கராசா; வேலுப்பிள்ளை குணசீலம்; குணரட்ணம் தவேந்திரன்; தாமோதரம்ஜெயேந்திரம்; ஆறுமுகம் மசாலிங்கம்; வேலுப்பிள்ளை பிரபாகரன்; கணபதிப்பிள்ளை கந்தராஜா, சிவகாசியம் அழகராசா; தங்கராசா சிறிகாந்தன்; முருகேசு உதயகுமார்; சின்னத்தம்பி முரளீதரன்; தேவநாயகம் ஜெயகுமார்; சின்னத்தம்பி தாமலிங்கம்; நல்லதம்பி அருணகிரி; கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார்; மூத்ததம்பி கனகராஜா; நடராசா ஜெயேந்திரன்; தியாகராஜா ஜெகசுதன்; பழனிவேல் ஜீவராசா; சிவலிங்கம் சுந்தரலிங்கம்; சின்னத்துரை மகேந்திரன்; பொன்னம்பலம் கிருஸ்ணன்; செக்கமலி செல்லமுத்து; பெருமாள் பிள்ளை கோகுலநாதன்; கணேசு நரேந்திரமூர்த்தி; பெருமாள்பிள்ளை திருநாவுக்கரசு; சிதம்பரப்பிள்ளை கிருபாகரன்; பாக்கியராஜா கணேஸ்வரன்; பொன்னையா தேவகுமார்; இராசையா இராசு; வேலாயுதம் சேவேந்திரராஜா; முருகேசு செல்வராஜா; வேலு பிள்ளை புஷ்பநாதன்; வல்லிபுரம் குமாரகுலசிங்கம்; கோபாலபிள்ளை அமிர்தலிங்கம்; கணபதிப்பிள்ளை அன்பன்; மார்க்கண்டு குமாரதாஸ்; சுப்பிரமணியம் தேவேந்திரன்; செல்லத்துரை கமலேந்திரன்; வேலுப்பிள்ளை தம்பித்துரை; பொன்னம்பலம்ரவிச்சந்திரன்; கணபதிப்பிள்ளை ஞானசேகரம்; வேலாக்குட்டி ராஜேந்திரன்; மாணிக்கன் அனுராஜ்; சிதம்பரம் சிவகாமிநதன்; தேவராஜா ரமேஸ்கன்; கணபதிப்பிள்ளை பத்மநாதன்; தேவராஜா சுரேஸ்சன்;

இராமசாமி இராமச்சந்திரன்; அப்துல்கரீம் முகமதுகரூன்; இளையதம்பி சின்னலிங்கம்; இராசமாணிக்கம் இராஜேந்திரன்; செபஸ்தியாம்பிள்ளை அற்புதம்கனசிங்காரம்; தியாகராஜாஅருந்தவராஜா; வைத்திகுணதாசா அல்லது சின்னத்தம்பி; சின்னத்துரை மோகன்; ஹேவா ஆனந்தன் அல்லது ஜினன் அல்லது ஆனந்த; நந்தகோபால் மதிவதன்; செல்லத்துரை ஜெயச்சந்திரன்; ஆறுமுகம் செலவராசா அல்லது செல்வம்; சிவையா விக்னேஸ்வரன்; சின்னராசாமரியதாஸ்; இரத்தினசிங்கம் சிவராஜா; முத்து ஜோசப்; பொன்னம்பலம்பரராசசிங்கம்; சிவஞானம் வரதராசா; தியாகராசா ராமச்சந்திரன்; தர்மலிங்கம் தர்மராஜா; மகாலமன் ரவிச்சந்திரநாத்; சந்தசாமி சிறீதர்; கனகசபாபதிக் குருக்கள் ராமகிருஷ்ணன்; பீற்றர் இராஜேந்திரன்; காமாட்சி மேகநாதன்; சிவஞானம் சிறீகரன்; செல்லப்பா மாதவன் அல்லது சேனா; வேலாயுதம் பாக்கியராசா; தர்மசேனா யோகேஸ்வரன்; ஜே சப் சாந்த அப்துல்கரீம்; கந்தையாசுந்தரலிங்கம்; பூபாலபிள்ளை தியாகராஜா; தங்கராஜா யோகன்; பிலிப்ஸ்ரீபன்; கிருஸ்ணபிள்ளை திருநாவுக்கரசு; வண்ணமணிதேவராஜ; கோவிந்தபிள்ளை நேசராஜா; தாமோதரம்பிள்ளை சிவலிங்கம்; அந்தோனிப்பிள்ளை அருளானந்தம்; சணேசசேகரம் சிவகுமார்; கோபாலபிள்ளை பிறேமநாதன்; கந்தப்பா கோபாலபிள்ளை; கதிரமலை துரையப்பா; புலேந்திரன் ராஜா; மூத்துப்போடி கிருபைராஜா; பிள்ளையார் கோபால்; தம்பிராஜா தங்கராஜா;

சிதம்பரபிள்ளை கிருபாகரன்; பிரவமூர்த்தி வர்ணகுலம்; இளையதம்பி தர்மலிங்கம்; சிவசுந்தரன் கருணாநிதி; சுப்பிரமணியம் பேரின்பராசா; ராஜு கனகராஜா; சீனித்தம்பி சிவஞானமூர்த்தி; குணசேகரன் பெந்திரன்; கோபாலபிள்ளை பாக்கியராசா; இராசையா சந்திரசேகரம்; சுப்பிராஜா ஆனந்த

(5ஆம் பக்கம் பார்க்க)

# உலகிற்கு எதிர்த் திசையில் சிறிலங்கா செல்கிறது

## —லலித் அத்துலத் முதலி

(கொழும்பு)

உலகம் முழுவதும் பரஸ்பர நட்புணர்வு மற்றும் நம்பிக்கை உணர்வோடும் ஒரே திசையில் முன்னேறும் இத் தருணத்தில் சிறிலங்கா அதற்கு நேரெதிரான திசையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோடும், அண்டை நாடுகளோடும் சுமுகமான ராஜதந்திர உறவுகளோ, நட்புணர்வோ இல்லாமல் செயற்படுகின்றது என்று முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவித்தார்.

கம்புறுப்பிட்டிய பகுதியில் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; இந்தியா கூட இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்திக் கொண்டுள்ள இவ்வேளையில் கொழும்பில் பரஸ்பர நலன்களுக்காக திறக்கப்பட்ட இஸ்ரேலிய நலன்காக்கும் பிரிவை பிரேமதாசா மூடியுள்ளார். இது ராஜதந்திரத்திற்கு முரணான செயல் ஆகும். இது போல தன்னை மட்டுமே முதன்மைப் படுத்தும் பிரேமதாசா இங்கிலாந்தையும், இந்தியாவையும் கூட சினங்கொள்ளச் செய்து விட்டார். இத்தகைய சர்வாதிகாரச் செயல்களின் மூலம் சிறிலங்காவை அவர் பாதிப்படையச் செய்து விட்டார். அவராலேயே நியமிக்கப்பட்ட ஆணைக்குழு எமது பெயர்களைத் தெளிவுபடுத்திய பின்பும் கூட எமக்குச் சேறு பூசும் வகையில் இஸ்ரேலுடன் எம்மைத் தொடர்பு படுத்திப்பேசுகிறார்.

ஏனைய நாடுகளுக்கு சினமூட்டக் கூடிய இத்தகைய செயல்களின் மூலமும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதன் மூலமும் சிறிலங்காவிற்கு கிடைக்கக்கூடிய பல வெளிநாட்டு உதவிகள்நிறுத்திவைக்கப் பட்டு விட்டன எனத்தெரிவித்தார். அத்துடன்-

சர்வதேச ரீதியில் அறியப்பட்ட பிரபல வர்த்தகரான உபாலி விஜயவர்த்தனாவின் துரதிர்ஷ்டமானமறைவு நாட்டுக்கும் குறிப்பாக கம்புறுப்பிட்டியாவுக்கும் பேரிழப்பு எனக் குறிப்பிட்ட திரு.லலித் அத்துலத் முதலி அவரது நெருங்கிய சகாவானகுமார அபயரத்தின இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடுசெய்துள்ளதன் மூலம் உபாலிவிஜயவர்த்தனாவின் ஆசிஎமது கட்சிக்குஉண்டு என்பதைத் தெளிவு படுத்துகிறது எனவும் குறிப்பிட்டார்.

# 10 ஆவது ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா 2 ஆம் திகதி (2-3-92) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்குஸ்டான்லிவீதியிலுள்ள சமாசக் காரியாலயத்தில் சமாசத் தலைவர் திரு.எஸ்.முருகநேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு யாழ். மாவட்டத்தில் உள்ளசகலபல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் தலைவர்களையும், சமாசத்தின் பிராந்தியசபைகளின் தலைவர்களையும் தவறாது பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு சமாச மாவட்டச் செயலாளர் திரு. ஏ. எம். ராஜ்குமார்தெரிவித்துள்ளார்.

(24)

# புலிகளுடன் தாமதமின்றி பேச்சுக்களை ஆரம்பிக்கவும்

## —டாக்டர் இல்யாஸ் கோரிக்கை

(புத்தளம்)

விடுதலைப் புலிகளுடன் தாமதமின்றிப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும், இனப் பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகளைக் கண்டறியும் படியும், டாக்டர் எம். ஐ. இல்யாஸ் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவை கேட்டுக் கொண்டுள்ளார்.

புத்தளம் மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உபதலைவரும், வடமேற்கு மகாண சபை உறுப்பினருமான டாக்டர் எம். ஐ. இல்யாஸ் தமது கோரிக்கையில் மேலும் இராணுவ ரீதியான வெற்றி சாத்தியமானாலும் கூட பல்வேறு இனங்களுக்கிடையிலும் சமாதனச் சூழல் ஏற்பட்டுவிடப் போவதில்லை. எனவே சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளின் தலைவர்களோடு பொருத்தமான இணக்கப்பாட்டிற்குவர உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

மேலும் 'ஐலன்ட்' நாளிதழுக்கு அவர் பேட்டியளிக்கையில் இராணுவ வெற்றி காணப்பட்டாலும் பல்வேறு இனக் குழுக்களிடையே அது அதிருப்தியை ஏற்படுத்துமெனவும, பல சந்ததிகளுக்கு அந்த அதிருப்தி நீடிக்கக் கூடுமெனவும் குறிப்பிட்டார். அத்துடன் மனோபாவமே நீடிக்கும் அமைதி வராது. இந்தப் போராட்டம் சரிக்கும் பிழைக்கும் இடையிலானது.

புத்தளம் மாவட்ட மாநாட்டில் பேசிய பிரேமதாசா இனப் பிரச்சினைக்கு பொருத்தமான மாற்றுத் தீர்வொன்றை முன் வைக்கும்படி எம்மையெல்லாம் கோரியிருந்தார். ஆனால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணும்படி பிரேமதாசாவைக் கேட்பதுடன் அவர் முன் வைக்கும் தீர்வை ஆதரிப்பதைத் தவிர மாற்றுத் திட்டம் எதுவும் எமக்குத் தெரியவில்லை எனவும் டாக்டர் எம். ஐ. இல்யாஸ் தெரிவித்தார்.

# பலவீனமடையும் வேளை தொண்டா சாதிக்கிறார்

## - டி.பி. சமரதுங்க

(கம்பளை)

அமைச்சர் எஸ். தொண்டமான் அரசுடன் ஒன்றாக இருந்தாலும் அரசு பலவீனமடைந்து எதனையும் சாதித்துக் கொள்ள முடியாத நேரம் பார்த்து தமது மக்களின பிரச்சினைகளை அரசுக்கு எடுத்துக் காட்டி அதனை வென்றெடுத்துக் கொள்கின்றார் என மத்திய மாகாண சபை சபாநாயகர் டி பி சமரதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பளையில் இடம் பெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிடடார்.

மூன்றரை லட்சம் அங்கத்தவர்களைக் காட்டிக் கொண்டு தொண்டமான் எல்லாவற்றையும் சாதிக்கின்றார் என்றால் நாம் ஏன் லட்சக் கணக்கில் இருந்து கொண்டு எமது உரிமைகளை பெற முடியாமல் தவிக்கின்றோம் என்று எம் மக்கள் சிந்திக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

# தோட்டத் தொழிலாளருக்கு வரட்சிநிவாரணம்வேண்டும்

(ஹற்றன்)

மலையகத்தில் நிலவும் கடும் வரட்சியைக் காரணம் காட்டி தோட்டத் தொழிலாளருக்கு வேலை நாட்கள் குறைக்கப் பட்டுள்ளன. வேலை நாட்கள் குறைக்கப்பட்டதால் தொழிலாளர்கள் பொருளாதாரரீதியில் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே நாட்டின்ஏனைய பகுதி மக்களுக்கு வழங்கப்படுவது போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் வரட்சி நிவாரணம் வழங்கப்படவேண்டும் என தொழிலாளர்களும் தொழிற்சங்க வட்டாரங்களும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நுவரெலியா, தலவாக்கொல்லை, அக்கரப்பத்தன பகுதித் தோட்டங்களில் சுமார் 15 அல்லது 16 நாட்களே வேலை வழங்கப்படுகின்றது.

அதேவேளையில் சம்பளம் வழங்கும் தினம், முற்பணம் வழங்கப்படும்தினம் என மாதத்தில் மூன்று தினங்களுக்குத் தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுவதில்லை எனவும் அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

ஹட்டன் பகுதியில் சுமார் 20 அல்லது 21 நாட்களும், பதுளைப் பகுதியில் சுமார் 20 நாட்களுமே வேலைகள் வழங்கப்படுகின்றன. இவ்வாறான நிலைமையால் தொழிலாளர்கள் வேலை நாட்களையும் இழந்து அதற்குரிய சம்பளப் பணத்தையும் இழக்கவேண்டியுள்ளது.

இந்நிலையில் வரட்சி நிவாரணம் மூலமே இதை நிவர்த்தி செய்ய முடியுமெனவும் ஒரு தொழிற்சங்க அதிகாரி தெரிவித்தார்.

# ஏப்ரல் 2 இல் க. பொ.த. (உ/த) விசேட பரீட்சை

(யாழ்ப்பாணம்)

விசேட க' பொ. த. உயர்தரப்பரீட்சை ஏப்பிரல் மாதம் இரண்டாம் திகதி ஆரம்பமாக உள்ளது. இதற்கான வினாத் தாள்கள் விரைவில் எடுத்து வரப்படவிருக்கிறது. (க)

# சீ-நோர் ஊழியருக்கு உணவுமுத்திரை

(யாழ்ப்பாணம்)

சீநோர் நிறுவனத்தின் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட இருக்கிறது. மேற்படி நிறுவனத்தின் தொழிற்பாடுகள் இராணுவ நடவடிக்கை காரணமாகநிறுத்தப்பட்டு நீண்ட நாட்களாகி விட்டது. இதனால் இங்கு கடமையாற்றிய தொழிலாளர்கள் தொழில் இழந்துள்ளனர். இதனால் இத் தொழிலாளர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்படஇருக்கிறது.

 Nallur Branch Library 

### சிந்தனைக்கு

தன்னை அறிய தனி அறிவாய் நின்றருளும்
நின்னை அறிந்து என் அறிவை நீங்கி நிற்க
வேண்டாவோ?
— தாயுமானவர்

ஈழநாதம்

3I, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 01-03-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# அரசியல்வாதிகளும் பௌத்த மதமும்

அரசியலில் ஆதாயம் தேடுவதற்காகவே தற்போதைய அரசு பௌத்த மதத்தைப் பயன்படுத்துகின்றது எனக் களனி பல்கலைக்கழகத் துணை வேந்தர் வக்பொல ராகுல தேரோ ஜனாதிபதி பிரேமதாசா அரசாங்கத்தைச் சாடியுள்ளார். பொதுத் தேர்தலில் பௌத்த சிங்களவரின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே அரசாங்கம் இவ்வாறு செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

துணைவேந்தர் வக்பொல ராகுல தேரோ அவர்களின் அரசு மீதான கண்டனம் பெருமளவு சரியானதே. ஜனாதிபதி பிரேமதாசா தன்னை ஒரு தீவிர பௌத்தன் எனக் காட்டிக்கொள்வதில் கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்த தலைவர்கள் யாவரையும் விட தீவிரமாகவே உள்ளார். அதற்காக பல காரியங்களையும் அவர் செய்துள்ளார்.

பௌத்த விகாரைகள் பலவற்றை நிர்மாணித்துள்ளார். புனரமைப்புச் செய்துள்ளார். பௌத்த பிக்குகளை தினசரி சந்தித்து ஆசி பெறுகிறார். ஆலோசனை கேட்கிறார். பௌத்தத்திற்கென அமைச்சு ஒன்றையே தனது மேற்பார்வையில் வைத்துள்ளார். அத்தோடு அரச காரியாலயங்களில் சமய வழிபாடுகள் நாளாந்த கடமையாக மாறி வருகின்றது. இதேவேளை சிறிலங்கா அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ரூபவாகினி, வானொலி போன்றவை தினசரி பௌத்த மத நிகழ்ச்சிகளை ஒளி, ஒலி பரப்புகின்றன. இதில் ஏதோ ஒரு விடயத்தில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா கலந்து கொண்டு தொலைக்காட்சியில் தினமும் தோன்றுவதும் உண்டு.

ஆனால், சிங்கள அரசியல் தலைவர்கள் பௌத்த மத நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், பிக்குகளுக்கு தானம் வழங்குவதும், தம்மைப் பௌத்தத்தின் பாதுகாவலர்கள் என பறை சாற்றிக்கொள்வதும் தற்போதைய சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் உருவானதொன்றல்ல. சிங்கள அரசியல்வாதிகள் பௌத்தத்தின் பேராலேயே கடந்த காலம் முழுவதையும் ஆண்டுவந்துள்ளார்கள். இலங்கையில் இன்று உருவாகியுள்ள இனப்பிரச்சினை உள்ளிட்ட சகல பிரச்சினைகளும் பௌத்த மதத்தின் பேராலேயே உருவாக்கப்பட்டன. அதாவது, ஆக்கிரமிப்பும், படுகொலைகளும் பௌத்தத்தின் பேராலேயே மேற்கொள்ளப்பட்டன. ஆனால் சிறிலங்காவின் தற்போதைய ஜனாதிபதி முன்னைய ஆட்சியாளர்களைவிட பௌத்தத்தின் பெயரை உச்சரிப்பதும், பயன்படுத்துவதும் சற்று அதிகம்.

இதேவேளை, பௌத்தத்தின் பெயரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு தனியாக அரசியல்வாதிகள் மட்டும் காரணமல்லர் பௌத்த பீடங்களும் பௌத்த பிக்குகளும் இதற்குக் காரணம் என்பதையும் துணைவேந்தர் வக்பொல ராகுல தேரோ புரிந்து கொள்ளவேண்டும்.

அரசியல்வாதிகள் தமது லாபத்திற்காக எவ்வாறு பௌத்த பீடங்களைப் பயன்படுத்தினார்களோ அதே போன்று பௌத்த பீடங்களும் அரசியலில் தமது செல்வாக்கை நிலைநாட்ட முற்பட்டே வந்துள்ளன. அத்தோடு காலத்திற்குக் காலம் அரசியலில் குழப்பங்களுக்கு வித்திட்டும் வந்துள்ளன.

இறுதியாக அமைச்சர் தொண்டமான் இனப்பிரச்சினை தொடர்பாக வைத்த தீர்வுத் திட்டத்திற்கு எதிராக பௌத்தபிக்குகளே முதலில்போர்க்கொடி உயர்த்தினார்கள். இனப்பிரச்சினை நெருக்கடியை உணர்ந்து கொண்ட அரசியல் கட்சிகள் அமைச்சர் தொண்டமானின் தீர்வுத் திட்டம் குறித்து மௌனமாக இருந்த வேளையில் பௌத்த பீடங்களே பெரும் குரல் எழுப்பி தொண்டமான் தீர்வுத்திட்டத்தை குழப்பி அடித்தன. சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டன. இதில் களனி பல்கலைக் கழக துணை வேந்தரும் அடங்குகின்றார்.

இந்நிலையில் அரசியல்வாதிகளுக்கு மதத்தை அரசியலில் பயன்படுத்த வேண்டாம் என ஆலோசனை கூறியுள்ள துணைவேந்தர். வக்பொல ராகுல தேரோ பௌத்த பிக்குகளுக்கும் பீடாதிபதிகளுக்கும் அரசியலில் தலையிட வேண்டாம் என வற்புறுத்தின் விரும்பத்தக்கது. இதனால் இலங்கை அரசியலில் குழப்பமும் குறையும். முன்னேற்றமும் ஏற்படும். இதனைத் துணை வேந்தர் செய்வாரா?

மூதாதையர் பறிகொடுத்த

# தோட்டக் காணிகளை திரும்பப் பெறவேண்டும்

### - அலுத்கம தேரோ கவலை

(கம்பளை)

எமது மூதாதையர்கள் பறிகொடுத்த தோட்டக் காணிகளைப் பிரித்தானியர்களிடம் இருந்து நாம் பெற்றுக் கொண்டபோதும் அதை அனுபவிக்கும் பாக்கியம் எமது சிங்களமக்களுக்கு இன்னும் கிட்டவில்லை என்று வண. அலுத்கம தம்மானந்த தேரோ தெரிவித்துள்ளார்.

கம்பளையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். கம்பளைப் பகுதியில் உள்ள கிராமப்புறமக்கள் வீடுகள் இல்லாமல் இருக்கின்றனர் என்றும், எதிர்காலத்திலாவது எமது சிங்களமக்கள் கட்சி பேதம் காட்டாமல் பௌத்தர்கள் என்ற ரீதியில் ஒன்றுசேர முயற்சி செய்யவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கிராம அலுவலர் பதவிக்கு போட்டிப் பரீட்சை

வெற்றிடமாக உள்ள கிராம சேவை அலுவலர் பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு நாடளாவிய ரீதியிலானபோட்டிப்பரீட்சை நடாத்தப்பட உள்ளது.

இப்பரீட்சை ஏப்பிரல் 25 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இதற்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இப்பரீட்சைக்குரிய விண்ணப்பங்கள் மார்ச் மாதம் 10 ஆம் திகதிக்குமுன்னர் அனுப்பிவைக்கப்படவேண்டும்.

மாவட்ட மட்டத்திலான போட்டிப்பரீட்சைக்கு கடந்த வருடம் விண்ணப்பித்தவர்கள் மீண்டும் இப்பரீட்சைக்கும் விண்ணப்பிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு வேண்டிய தகைமைகளும் மாதிரி விண்ணப்பப்படிவமும் விரைவில்வெளியிடப்பட இருக்கிறது. (க)

## கோஸ்ரிக் சோடா எடுத்துவர அனுமதி

சவர்க்கார உற்பத்திக்குத் தேவையான ஒரு தொகுதி கோஸ்ரிக் சோடாவை வட பகுதிக்கு எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. யாழ். மில்க்வைற்தொழிலகத்திற்கு முதற் கட்டமாக இரண்டு மெற்றிக்தொன் கோஸ்ரிக் சோடா எடுத்து வரப்பட இருக்கிறது. இதைப் பயன்படுத்தி மில்க்வைற் தொழிலகம் விரைவில் இயங்கவுள்ளது. (க)

### களு. இராணுவ

ராஜா; மெசிட்ரோ பெர்னான்டோ; தாமோதரம் அருள்ஞானம்; கணபதிப்பிள்ளை குருகுலசிங்கம்; அன்னையன் வடிவேல்; சாமித்தம்பி சிவலிங்கம்; அருமைக்குட்டி குணரத்தினம்; சுப்பிரமணியம் கணேசமூர்த்தி; வைரமுத்து செல்வராஜா; தியாகப்பன் கருணானந்தபிள்ளை பாலிப்போடி சத்தியமூர்த்தி; இராசரத்தினம் காந்திஸ்ரன்; சங்கரப்பிள்ளை ரவீந்திரன்; அந்தோனி சுவக்சீன்; கணபதிப்பிள்ளை தம்பிராஜா; இளையதம்பி மகேஸ்வரன்; இராஜரத்தினம் வேதராஜா; நடராஜா காந்தகுமார்; செல்லையா நமசிவாயம்; சிவஞானம் மனோரதம்; சின்னத்தம்பி சிவராஜா; கோபாலபிள்ளை சுவேந்திரலிங்கம்; கதிரன் தயாளன்; மகேந்திரராஜபிள்ளை பேரின்பராஜா; செலலத்துரை செல்வநாயகம்; வேலாயுதம் சுவேந்திரராஜா; கார்த்திகேசு குணரத்தினம்; கார்த்திகேசு பேரின்பராசா; தாண்டவன் கணேசன்; மார்க்கண்டு தங்கநாதன்; சின்னத்துரை பரமநாதன்;

நடராஜா பரராசசிங்கம் அல்லது பரா; பொன்னையா பேரின்பம்; பீற்றர் வில்லியம் மரியதாஸ் அல்லது ரவி; இருதயம் செல்வகுமார்; கயிலாயன் உந்து கணேஷ்; தேவநாயகம் அழகசுந்தரம்; வேதாரணியம் புத்திசிகாமணி; கணபதிப்பிள்ளை கணேசன்; பொன்னம்பலம் குருதரன்; தங்கராஜா காளிமுத்து; முத்துதம்பி கங்கைவரன்; வைத்தி ஜெரால்ட்யூட்; தேவநாயகம் செல்வராஜா; பொரன்றி சிங்கராசா; தர்மலிங்கம் அற்புதராசா; வடிவேல்ரட்ணசிங்கம்; வேலுப்பிள்ளை சுதாகரன்; வீரசிங்கம் ரகுநாதன்; றப்பியேல் அமலதாஸ்; செல்வநாயகம் அருள்நாயகம்; காசுபதி கோணேஸ்; செல்லத்துரை தர்மலிங்கம்; சின்னத்தம்பி ரவீந்திரன்; கணபதிப்பிள்ளை தங்கேஸ்வரன்; அருளானந்தராசா பவானந்தராஜா; கோபாலகிருஷ்ணன்; கந்தசாமி ஆனந்தராசா; கிருஷ்ணபிள்ளை சாந்தகுமார்; செல்லத்தம்பி தயாசீலன்; வேல்முருகு வேல்தாசன்; மயில்வாகனம் செல்வராஜா; பொடிசிங்கம் ரட்ணராஜா; பொடிசிங்கம் ஜீவராசா; பொடிசிங்கம் பத்மராஜா; மேதசாமி தயாசீலன்; அழகுதுரை பிறேமானந்தன், இளையதம்பி சுந்தரராஜா; செல்வம் ரவிச்சந்திரன்; கிருஷ்ணபிள்ளை விநாயகமூர்த்தி; பொன்னையா முத்துலிங்கம்; சுந்தரராசா சுகுமார்; சண்முகம் பாஸ்கரன்;

முத்துத்தம்பி சந்திரன்; ராமலிங்கம் மகேஸ்வரன்; இராசையா சங்கர்; பாலன் சண்முகம்; இராமையா இராசா; வேலாயுதம் வனசுதன்; சின்னத்தம்பி யோகராசா; கணபதிபிள்ளை சிவானந்தராசா; மொகமட் காசிம் காகுருத்தம்பி; சிவமணி சுந்தரம்; கந்தக்குட்டி மோகன்தாஸ்; சிராப்டீன் செய்ல்; கிருஷ்ணபிள்ளை மதியழகன்; கந்தையா பத்மநாதன்; மாணிக்கம் இலங்கைவேந்தன்; கன்னையா சிவகுமாரன்; மயில்வாகனம் சிவலிங்கம்; சின்னத்துரை பரமேஸ்வரன்; வேல்முருகு தேவராஜா; கந்தன் இராமலிங்கம்; முத்துக்குமரன் ரவிச்சந்திரன்; தங்கராஜா குவேந்திரராஜா; குலேந்திரன் முகமட் கனிபா; சிறிமுருகன் அல்லது ரவி; முகமட் இப்ராகிம் ஜப்பர்; சோமசுந்தரம் சரவணபவன்; தங்கராஜா குவேந்திரராஜா; சின்னத்தம்பி விக்னேஸ்வரன்; வேல்முருகு ரவீந்திரன்; வடிவேல் மோகனசுந்தரம்; சங்கரப்பிள்ளை மோகன்; முருகுப்பிள்ளை சுதாகரன்; அமட்லெப்பை ஜமீல்; செல்லப்பா ராஜபுத்ரம; வேல்முருகு பிரதீபன்; கிருபைராஜா செல்வராஜா; கந்தையா தேவமனோகரன்; இராசசிங்கம் இரவீந்திரன்; சின்னத்தம்பி மதியழகன்; சாம்பகுட்டி புஷ்பரத்தினம்; கணபதிப்பிள்ளை அற்புதநாதன்; அரசரத்தினம் சந்திரசேகர்; ஆறுமுகம் விஜேந்திரன்; கணபதி பரஞ்சோதி; தாரிக்கல் மாரிமுத்து; வைத்திலிங்கம் சௌந்தரராஜா; வடிவேல்கடம்பன் உதயகுமார்; நல்லதம்பி துரைராஜசிங்கம்; கதிரேசம்பிள்ளை முருகமூர்த்தி; பொன்னுத்துரை செல்வகுமார்.

கணபதிப்பிள்ளை செல்வராஜா; சுப்பிரமணியம் கனகேஸ்வரன்; கணபதிப்பிள்ளை குழந்தைவடிவேல்; கணபதிப்பிள்ளைநடராசா; கதிர்காமத்தம்பி நடராஜலிங்கம்; குருசாமி யோகரத்தினம்; நாகலிங்கம் நல்லிநாதன்; கந்தையா தேவராசா; செல்வராசா சுந்தரராசா; சிவசேகரம் பேரின்பநாதன்; ரட்ணம் பாலகிருஷ்ணன்; நடராசா அமிர்தலிங்கம்; வடிவேலு கருணாகரன்; அம்பலவாணர் கௌரிதாசன்; கந்தசாமி ரகுநாதன்; சேவகன் நாகரத்தினம்; குருசாமி செல்வரத்தினம்; கதிர்காமத்தம்பி மதிவனம்; காசியப்பு தியாகராசா; பெருமாள் கிருஷ்ணசாமி; சாமிபால் மனோகரன்; சேவகன் சந்திரன்; சின்னத்தம்பி விஜயன்; வேலாயுதன் கலைமணி; கந்தசாமி கணேசலிங்கம்; இளையதம்பி கனகசிங்கம்; முத்துசாமி சின்னையா; இளையதம்பி யோகராசா; முங்கம் ரவிச்சந்திரன் அல்லது சூட்டி; நாகலிங்கம் தேவமூர்த்தி; பொன்னுசாமி பூமிநாதன்; ராமசாமி நடராசா; கிருஷ்ணபிள்ளைமனோகரன்; மயில்வாகனம் தர்மலிங்கம்; மயில்வாகனம் வினோதரன்; ராமசாமி ரட்ணசாமி; நாகையா வன்னிபசிங்கம்; சிவகுமாரன் அருணன்; கந்தசாமி கமலநாதன்; வேலாயுதம் முரளிதரன்; முகமட் கனிபா றிபைடீன்; பீட்டர் ஜோன்சன்; சின்னன் அசன்லெப்பை; தங்கராசா முகுந்தன்;

சிறீசண்முகம்லீனஸ் ராகுலகுமார்; அப்புத்துரை வரதராசா; கதிர்காமத்தம்பி திருஞானசம்பந்தன்; தாமோதரம் பிள்ளை மகேஸ்வரன்; கிருஷ்ணபிள்ளை சுகுமாரன்; சுப்பிரமணியம் பரந்தாமன் அல்லது நந்தன்; முருகேசு சரவணமுத்து; கிருஷ்ணசுவாமி ரவீந்திரன அலலது ரவி; சுப்பன் வைரன் தியாகராசா; ராமையா ஆறுமுகம்; செல்லத்தம்பி ஜெயசுந்தரம்; ரட்ணசிங்கம் பாலேஸ்வரன்; அந்திப்பிள்ளை சற்குணம் அல்லது அழகையா; சுப்பிரமணியம் நல்லதம்பி; சுப்பிரமணியம் சுந்தரம்; வேலாயுதம்பிள்ளை; இளோனி சிவசந்திரபோஸ்; ஆசிர்வாதம் புதுமதாசன்; ஜோசப் ரவீந்திரன்; தம்பையா தேவராசா தேவதாஸ்; அருணாசலம் ஞானசேகரம்; சித்திரவேல் கனகலிங்கம்; மயில்வாகனம் செல்வராசா; நாகபிள்ளை ராஜகோபால்; செல்லத்தம்பி தயாளன்; சிற்றம்பலம் சிவானந்தி; அருமைத்துரை இந்திரன்; மனோகரானந்த குணசீலன்; கணபதிப்பிள்ளை அந்தோனி குரூஸ்; ஆறுமுகம் பேரின்பராசா; மயில்வாகனம் ஜீவரத்தினம்; வேலுப்பிள்ளை அரசரத்தினம்; பூபாலபிள்ளை கணேசசேகரம்; கந்தையா கணேஷ்; வேலாயுதம் கணேஷ் ஆறுமுகசாமி ராஜாத்தினம்; ராமசாமி நடராசா; சோமசுந்தரம் ரவிச்சந்திரன்; கோபாலபிள்ளை கணேசன்; கதிரமலை உதயன்; கந்தையா பிள்ளை பேரின்பராசா; அரசரத்தினம் வேலானந்தன்; யூசப் ஜல்ஸ் முரளிதரன்; ராமலிங்கம் சற்குருநாதன்; நல்லையா புவனேசராசா; குஞ்சப்பு பாலகிருஷ்ணன்; முருகேசு கந்தசாமி; கந்தசாமிநாகமணி மாறன்; சரவணமுத்து கெங்கேஸ்வரன்

# உலகவங்கிக்குக் கடிதம்; நேர்மையற்ற செயலல்ல

மன் மோகன் சிங்

(டில்லி)
உலக வங்கிக்குக் கடிதம் எழுதியதில் தான் நேர்மை பிறழவில்லை என்று நிதியமைச்சர் கலாநிதி மன்மோகன் சிங் நேற்று முன்தினம் லோக்சபாவில் தெரிவித்தார்.

சபையில் விரிவாக விவாதிக்கப்பட்ட அரசு பின்பற்ற வேண்டிய பொருளாதாரக் கொள்கை குறித்துத்தான் இந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது என்று நிதியமைச்சர் சொன்னார். வரவு - செலவுத்திட்ட யோசனைகள் எதுவும் முன்கூட்டித் தெரிவிக்கப்படவில்லை என்று மன் மோகன் சிங் தெரிவித்தார்.

பொது வரவு - செலவுத்திட்டத்தைப் பற்றி உலக வங்கிக்கு நிதியமைச்சர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது பாராளுமன்றத்தின் விதியை மீறிய செயலாகும் என்று பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் என். கே. அத்வானி கூறியிருக்கிறார். இந்தக் கடிதம் வரவு - செலவுத் திட்ட இரகசியத்தை உண்மையில் மீறியிருக்கிறதா என்பதைத் தீர்மானிக்க வரவு செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்படும் வரையில் தமது கட்சி காத்திருக்கும் என்று புதுடில்லியில் செய்தியாளர் கூட்டத்தில் பேசும் போது அத்வானி தெரிவித்தார்.

மன் மோகன் சிங் எழுதிய கடிதத்தின் நகல் ஏற்கனவே இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வெளியாகியது குறிப்பிடத்தக்கது.

## இடம்பெயர்ந்தோருக்கான விநியோக அளவுத் திட்டம்

(யாழ்ப்பாணம்)
சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம் பெயர்ந்துள்ளவர்களுக்குரிய இம்மாதம் முதல் இரு வாரங்களுக்குமான இலவச உலர் உணவு விநியோக அளவுத்திட்டமும் விலைப்பட்டியலும் வெளியிடப்பட்டிருக்கிறது.

| பொருள் | விற்பனை விலை (1 கிலோ) | 1 அங். | 2அங். | 3அங். | 4அங். | 5அங். |
|---|---|---|---|---|---|---|
| அரிசி | 14.80 | 2 கிலோ | 2 கிலோ | 4 கிலோ | 5 கிலோ | 6 கிலோ |
| மாவு | 13.25 | 2 கிலோ | 2 கிலோ | 4 கிலோ | 5 கிலோ | 6 கிலோ |
| சீனி | 25.90 | 500 கிராம் | 750 கிராம் | 700 கிராம் | 1 கிலோ | 1.4 கிலோ |
| கௌப்பி | 27.00 | 200 கிராம் | 400 கிராம் | 250 கிராம் | 350 கிராம் | 400 கிராம் |
| ஹைலன்ட் | 50.00 | — | 1 பக். | 1 பக். | 1 பக். | 1 பக். |
| சில்லறைப் பொருள்கள் | — | 1.15 | 2.27 | 1 92 | 1.20 | 1.94 |

மேற்படி அளவுத் திட்டத்திலும் விலையிலும் இம்மாதம் முதல் இரு வாரங்களுக்கான விநியோகத்தை ஆரம்பிக்கும்படி அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது. (க)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை

### சிற்றூர்தி(மினிபஸ்)சேவை

சிலகாலம் தடைப்பட்டிருந்த யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை சிற்றூர்தி (மினிபஸ்) சேவை 769 பாதையால் சுன்னாகம் ஊடாக எதிர்வரும் 02 - 03 - 92 திங்கட்கிழமை முதல் நடைபெறும் என்பதை பயணிகளின் கவனத்திற்கு அறியத்தருகின்றோம்.

பாடசாலை மாணவ / மாணவிகளின் நலன் கருதி காலை 7.00 மணிக்கு தெல்லிப்பளையிலிருந்து ஆரம்பமாகும் இச்சேவை யாழ். செயலகம் வரை நீடிக்கப்பட்டு, பிற்பகல் 2 05 மணிக்கு யாழ். செயலகத்திற்கண்மையிலிருந்து புறப்பட்டு தெல்லிப்பளையை வந்தடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(2249) சேவை நிர்வாகத்தினர் (769)

யாழ்ப்பாணம்

### தொழில்நுட்பக் கல்லூரி- 1992ஆம் கல்வியாண்டு வகுப்புகள்

மேற்படி வகுப்புகள் 1992-02-24 ஆம் திகதி முதல் நடைபெறுகின்றன. 'ராகிங்' என்ற பெயரில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அச்சமின்றி வகுப்புகளுக்கு வருவதற்காக 'ராகிங்' முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. எனவே அனுமதி கிடைத்த மாணவர்கள் யாவரையும் வகுப்புகளுக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். தொடர்ந்து சமுகமளிக்கத் தவறுபவர்களின் அனுமதிகள் இரத்துச் செய்யப்பட்டு, அவர்களின் இடத்துக்கு விரைவில் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்பதனை அறியத் தருகிறேன்.

(சி/3985) -அதிபர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திராவீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஐந்து பொலிசார் உட்பட

## ஏழுபேர் சுட்டுக்கொலை; ஆயுதங்கள் அபகரிப்பு

### -உ.பிரதேசத்தில் சம்பவம்

(டில்லி)
உத்தரப் பிரதேசத்தில் நைனிடால் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமத்தில் ஐந்து பொலிசார் உட்பட ஏழுபேர் தீவிரவாதிகளின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமாகியுள்ளனர். துணை இன்ஸ்பெக்டர் உட்பட பொலிசார் ரோந்துப் பணியில் ஈடுபட்ட போதே தீவிரவாதிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர். கொல்லப்பட்ட பொலிசாரிடமிருந்து துப்பாக்கிகளும் தீவிரவாதிகளால் அபகரிக்கப்பட்டுள்ளன.

அரசியல் இலாபத்திற்காக

## அரசு பௌத்த மதத்தை பயன்படுத்துகின்றது

### - ராகுல தேரோ கண்டனம்

(கொழும்பு)
அரசியல் லாபம் பெறுவதற்காக அரசு பௌத்த சமயத்தைப் பயன்படுத்துகிறது என்று வண. வல்பொல ராகுலதேரோ பிரேமதாசா அரசைக் கண்டித்துள்ளார்.

களனிப் பல்கலைக் கழக உபவேந்தரான வண. வல்பொல ராகுல தேரோ மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் தேர்தலின் போது பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெறும் நோக்குடன் பிரேமதாசா அரசு 2,300 பேர் பௌத்த பிக்குகளாகும் மதச் சடங்குகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது என்றார். மதவைபவத்துக்கு விளம்பரம் தேவையில்லை என்றும் இது போன்ற விளம்பரங்களால் அரசியல் கட்சிகள் இலாபம் பெறுவதாகவும் அவர் குறை கூறினார்.

## நாடு திரும்புவோரை வேலையில் சேர்த்து கொள்க

(கொழும்பு)
தமிழகத்தில் இருந்து நாடு திரும்பும் சகல ஊழியர்களையும் சம்பள நிலுவையுடன் மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ளுமாறு சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் ஆகியவற்றை பொது மாகாணசபை உள்நாட்டலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

தமிழகத்திற்குச்செல்வதற்கு முன்பிருந்த வேலையைக் கொடுக்கப்படவேண்டும் எனவும் தற்காலிக மாற்று ஊழியர்கள் சமயா சமய ஊழியருக்கும் இந்த விதி பொருந்துவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### வவுனியா

அடைந்துள்ளன.

நேற்று பேயாடிக் கூளாங்குளப் பகுதியில் சிறிலங்கா அரசுக்குச் சொந்தமான உலங்கு வானூர்தியொன்று றொக்கட் தாக்குதல்களை மேற்கொண்டது

இதேவேளை மன்னார்-வவுனியா வீதியிலுள்ள பல கிராமங்கள் பலத்த எறிகணைத் தாக்குதலுக்கு உட்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### கல்வி

இவ்வைபவம் நடைபெறும்.

இப் பயிற்சி நெறிக்குப் பட்டதாரி ஆசிரியர் சம்பளம் பெறும் அனைத்து ஆசிரியர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்சியாளர்களும் கலந்து கொள்கின்றனர்.

ஆசிரியர் வன்மை விருத்திக்கான இப்பயிற்சி நெறி முதல் தடவையாக ஆரம்பிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

### கடற்புலிகளின்

கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் படையினர் தரப்பில் உயிரிழப்புக்களும், காயங்கள் ஏற்பட்டதையும் ஊர்ஜிதம்செய்தது.

## மாணவர் முத்திரை எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)
பாடசாலை மாணவர்களுக்கான மதிப உணவு முத்திரைகள் எடுத்துவருவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கிறது.

நாளை இங்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் கப்பலில் இவை எடுத்துவரப்பட உள்ளன. (க)

பேராதனை பல்கலைக்கழக கலைமாணி

### விரிவுரைகள் 1992 டிசம்பர்

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள் (1-3-
இன்றுஆரம்பமாகின்றன. இதுவரை பரீட்சை முடி
கிடைக்கப் பெறாத மாணவர்கள் எம்முடன் தொ
கொள்ளவும்.

உதவிப்பதிவாளர்

பட்டப்படிப்புகள் கல்லூ

148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3965)

உலக கிண்ண கிரிக்கெட்

## நியூசிலாந்து, மே. இந்தி அணிகள் வெற்றி

ஆக்லாண்டில் நேற்று நடைபெற்ற உலக கிண்ண கிரிக்கெட்போட்டியில் நியூசிலாந்து அணி தென்னாபிரிக்க அணியைத் தோற்கடித்துள்ளது. தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் ஏழு விக்கட் இழப்பிற்கு 190 ஓட்டங்களைப் பெற்றது. நியூசிலாந்து அணி 34 ஆவது ஓவரில்
விக்கட் இழப்பிற்கு 19
டங்களைப் பெற்று வெ
பெற்றது

பிறிஸ்வேனில் மேற்கி
தீவுகள் அணி சிம்பா
அணியை 75 ஓட்டங்க
தோற்கடித்தது. மேற்கி
அணி 8 விக்கட் இழப்
264 ஓட்டங்களைப் பெ
சிம்பாவே அணி 7 விக்
இழப்பிற்கு 189 ஓட்டங்
எடுத்தது.

இன்று பிறிஸ்வேனில்
திய அணியை எதிர்த்து அ
திரேலிய அணி விளை
உள்ளது.

### காங்கிரஸ் தலைவர் சுட்டுக்கொ

பஞ்சாப்பில் நேற்று
முதல நடைபெற்ற வெவ்
சம்பவங்களில் காங்கிர
தலைவர் ஒருவரும்
நான்குபேரும் தீவிரவா
னால் கொல்லப்பட்டா

தூரிக காங்கிரஸ்
ரான பக்கீத்திரத்சிங்
டைய மெய்க்காவலர்,
சப் இன்ஸ்பெக்டர், ப
உறுப்பினர் ஆகியோ
தீவிரவாதிகளால் சு
கொல்லப்பட்டனர்.

### மேலதிக மின்கட்டண

(கொழும்பு)
வரட்சி காரணமா
சார உற்பத்திக்கு
மேலதிக செலவீனத்
ளிக்கும் பொருட்டு இ
மின்சாரசபை எரிபொ
கட்டணத்தை அறவிடும்
டத்தை இன்று
கிழமை முதல் நடை
படுத்தவுள்ளது.

வீட்டுப் பாவனை
80 சதவீதத்தினரிடம
தம் 50 சதத்தில்
25 ரூபாவரை மேல
கட்டணம்அறவிடப்ப
மின்சாரசபை அ
ளது.

### நான்கு

மணியம், கற்பகபுர
னார்வீதி, வவுனியா],
அல்லதுமுருகன் [சபார
கரன், புளியங்குளம்
னியா], வள்ளுவன் [க
சிறீதரன், 94 ஆம்
1ஆம் படிவம், சேம
னியா] ஆகியோருக்கு
லைப் புலிகள் தமது வீ
கத்தைத் தெரிவித்து
கின்றனர்.

நேற்றுப் பகல் 12.30
யளவில் ஈச்சங்குளம் ச
உலங்கு வானூர்தி
கொண்ட தாக்குதலில்
ஆதரவாளர் ஒருவர்
சாவைத் தழுவிக்கொண்
வீரச்சாவை தழுவிக்கொ
ஒரு பிள்ளையின் தந்
ரான பொன்னர் பால
மணியம்(வயது 34) [
மருதங்குளம் கிடாச்சா
னியா] என்பவருக்கு
லைப் புலிகள் தமது வீ
கத்தைத் தெரிவித்து
கின்றனர்.